வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—10

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணியாபுரம், புதுப்பாளையம் சாலை என்பது நாமக்கல் உட்கோட்டத்திற்குட்பட்ட மாவட்ட இதர சாலையாகும். பரளி, அணியாபுரம், புதுப்பாளையம் சாலையினுடைய தூரம் 6 கிலோ மீட்டராகும். இச்சாலையானது 2018–2019 ஆம் நிதியாண்டில் புதுப்பிக்கப்பட்டு, 5 ஆண்டுகள் நிறைவடையவில்லை. இச்சாலை 2024–2025 ஆம் நிதியாண்டில் முன்னுரிமை அளித்து எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

213—

கிராம நிருவாக அலுவலகம்

***4058—திரு. ச. சிவகுமார்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், களையூர் மற்றும் நாட்டார்மங்கலம் ஆகிய இரண்டு கிராமங்களுக்கும் பொதுவாக கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வல்லம் ஒன்றியத்தைச் சேர்ந்த நாட்டார்மங்கலம் மற்றும் களையூர் ஆகிய இரு கிராமங்களுக்குப் பொதுவாக கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் நிலுவையில் இல்லை. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் மூலமாக உரிய கருத்துரு அரசுக்குப் பெறப்படும்போது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலம் சட்டமன்றத் தொகுதி, செஞ்சி தாலுகா, வல்லம் ஒன்றியம், களையூர் மற்றும் நாட்டார்மங்கலம் ஆகிய இரண்டு ஊர்களுக்கும் ஒரே இடத்தில் அதாவது களையூரில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் உள்ளது. இதற்குரிய அலுவலகம், நூலகக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. செஞ்சி தாலுகாவில் மொத்தம் உள்ள 44 கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்களில், பாதி அலுவலகங்கள் கிராம நூலகக் கட்டடங்களிலும், பாதி அலுவலகங்கள் பொது இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

அதேபோல், மயிலம் தொகுதி, திண்டிவனம் தாலுகாவில் 54 கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்கள் உள்ளன. இதில் 19 கட்டடங்கள் மிக மோசமாகப் பழுதடைந்துள்ளன. மீதி 35 கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்கள் பொது இடங்களிலும், தனியார் இடங்களிலும் மற்றும் கிளை நூலகங்களிலும் செயல்பட்டு வருகின்றன. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும் தனித் தனியாக கழிப்பிட வசதியுடன்கூடிய கிராம நிருவாக அலுவலர் தங்கிப் பணியாற்ற, குடியிருப்புக் கட்டடமாக, கிராம நிருவாக அலுவலர் அலுவலகத்தைக் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிருவாக அலுவலர்

அலுவலகம் களையூர் கிராமத்தில் 2016 ஆம் ஆண்டு வரை செயல்பட்டு வந்தது. ஆனால், அந்தக் கட்டடம் மிகவும் மோசமாகப் பழுதடைந்த காரணத்தினால், 2016–லேயே அந்தக் கட்டடத்தை இடித்து விட்டார்கள். இப்போது, அதற்குப் பதிலாக புதிதாகக் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டுவதற்காக களையூர் கிராமத்தில் சர்வே எண் 11/1–ல், 0.85 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில், நிச்சயமாக அந்த இடத்தில் புதிதாகக் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்டித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது மயிலம் சட்டமன்றத் தொகுதியில், மயிலம் தாலுகாவிற்கு கருத்துரு வழங்கப்பட்டு— எங்கள் மயிலம் சட்டமன்றத் தொகுதியில் 48 ஊராட்சிகள்; திண்டிவனம், ஒலக்கூரில் 24 ஊராட்சிகள்; திண்டிவனம் தாலுகா, வல்லத்தில் 66 பஞ்சாயத்துகள் உள்ளன. எல்லோரும் செஞ்சி தாலுகாவிற்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒன்று அல்லது இரண்டு தாலுகா அலுவலகங்கள் இருக்கும். எனது சட்டமன்றத் தொகுதியில் ஒரு தாலுகா அலுவலகம்கூட இல்லாத காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாலுகாவை உருவாக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தகுதி இருக்குமென்று சொன்னால், எதிர்காலத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 214, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி,

2022 மே 4]

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

214—

மீன்வளக் கல்லூரி

*17822—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணைப் பகுதியில் மீன்வளக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணைப் பகுதியில் மீன்வளக் கல்லூரி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீரையும், மலை நீரையும் மனமுவந்து ஏற்று, விதவிதமாய் மீன்களைத் தினமும் முகர்ந்து, உற்று வாழும் மீனவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டுமெனில், உள்நாட்டு மீன் வளத்தை மேம்படுத்த வேண்டியது அரசின் கடமையாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், பல்வேறு உள்நாட்டு நீர் வள ஆதாரங்களான, நீர்த்தேக்கங்கள், பெரிய, சிறிய பாசனக் குளங்கள், பருவ மழையால் நிரம்பும் குறுகியகால குளங்கள், குட்டைகள், ஆறுகள், கழிமுகங்கள் ஆகியவற்றின்மூலம் உள்நாட்டு மீன்வளம் அதிகரிக்கப்பட வேண்டிய காலகட்டத்தில்